<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 56/2022

Deposition of Witness : PW –1

Name : தரண்சாய் (வயது 34)

Father's Name /W/o : த/பெ.ஜனார்தனன்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : திருநின்றவூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 24.04.2025.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1.நான் எத்தனையாவது படிப்பு வரை படித்துள்ளேன் என்றால் பொறியியல் பட்டப் படிப்பு படித்துள்ளேன். என் சொந்த ஊர் திருநின்றவூர் என்றால் இல்லை என் சொந்த ஊர் திருத்தணி வேலைக்காக திருநின்றவூரில் வசித்து வருகிறேன். பொதுவாக சொத்து வாங்கும்போது சட்ட ஆலோசணை பெற்று தான் வாங்குவேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தும் சட்ட ஆலோசணை பெற்று தான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதிகள் மீது உறுத்துக்கட்டடணை பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.234/2பி, 234/2எப், 234/2ஜி. வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 72 சென்ட் ஆகும். பிரதிவாதிகள் எந்த முகவரியில் வசித்து வருகிறார் என்றால் பெருங்களத்தூர் தாவா சொத்து அருகில் வசித்து வருகிறார்கள். பிரதிவாதிகள் தாவா சொத்து உள்ள கிராமத்தில் எத்தனை வருடமாக வசித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது.

3. தாவா சொத்து குறித்து ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் தெரிவித்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதைப்படித்து தான் நான் பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரை என்றால் சரிதான். பதிலுரையில் பிரதிவாதிகள் மேற்படி வழக்கு எண் 231/1988 பற்றி விபரம் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான்.

4. பிரதிவாதிகளின் தகப்பனார் பொன்னுசாமி என்பவர் ஆறுமுகம் மற்றும் கணேசன் என்பவர்மீது மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் பிரதிவாதிகளின் பதிலுரை படித்ததில் தெரிந்துக்கொண்டேன். மேற்படி வழக்கின் விபரம் தற்போது என்னிடம் பதிலுரையை காண்பிக்கும்போது தான் படித்து தெரிந்துக்கொண்டேனா அல்லது இதற்கு முன்பு படித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் நான் ஏற்கனவே எதிர்உரையில் படித்து பார்த்து கொண்டேன். மேற்படி வழக்கு எண்.231/1988 30.11.2007 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5. வழக்கு சொத்து எந்த வருடம் யாரிடம் இருந்து வாங்கினேன் என்றால் ரவி என்பவரிடம் இருந்து 2022 ஆம் ஆண்டு வாங்கினேன். ரவி என்பவர்க்கு அச்சொத்து எப்போது கிடைத்தது என்றால் 2006 ஆம் ஆண்டு கணேசன் என்பவருடன் வாரிசுதாரர்ரிடம் இருந்து வாங்கினார். ரவி என்பவர் மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது தான் தாவா சொத்து வாங்கினாரா என்றால் எனக்கு தெரியாது.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)